بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

2 ஸஃபர் 1438 ஹிஜ்ரி கமரி | 3 நுபுவ்வத் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி | 3 நவம்பர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அல்லாஹ்வின் தூதர்கள் மீது நம்பிக்கை கொள்வதன் மூலமாகவே அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை ஏற்பட முடியும். இதற்கு காரணம் அந்த தூதர்கள்தான் அவனது பண்புகளை வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றனர்.**

**இறைவனின் பண்புகள் தொன்று தொட்டே இருந்து வருவது போன்றே நிரந்தரமானவையாகவும் இருக்கின்றன. அவற்றை வெளிப்படையாகக் காணும் வகையில் காட்டித் தரக்கூடியவர்களாக நபிமார்கள் அலைஹுமுஸ் ஸலாம் மட்டுமே இருக்கின்றனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

*கேள்வி (8) :* காய்ந்துபோன ஓரிறைமை மட்டும் இரட்சிப்பிற்கான அடித்தளமாக இருக்க முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் இருந்தும் விலகியிருந்து எந்தவொரு செயலைச் செய்வதும் மனிதனை இரட்சிப்பை பெற்றவனாக ஆக்க முடியாது என்பதே நமது ஈமான் ஆகும். ஆனால், உள்ளம் நிம்மதி அடைவதற்காக அப்துல் ஹகீம் கான் எழுதியுள்ள வசனங்களின் பொருள் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன். உதாரணமாக,

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالنَّصَارَىٰ وَالصَّابِئِينَ مَنْ آمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ

என்ற வசனத்தையும் بَلَىٰ مَنْ أَسْلَمَ وَجْهَهُ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهُ أَجْرُهُ عِنْدَ رَبِّهِ என்ற வசனத்தையும் تَعَالَوْا إِلَىٰ كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهِ شَيْئًا وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا أَرْبَابًا مِنْ دُونِ اللّٰهِ என்ற வசனத்தையும் அவர் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

*பதில் :* திருக்குர்ஆனில் இந்த வசனங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால் தூதர் மீது நம்பிக்கை கொள்ளாமலேயே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது இதன் கருத்தல்ல என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, இதன் கருத்து ஒருவர் ஏகனான இணையில்லா இறைவன் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் இரட்சிப்பைப் பெறவே முடியாது என்பதாகும். அல்லாஹ்வின் தூதர்கள் மீது நம்பிக்கை கொள்வதன் மூலமாகவே அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை ஏற்பட முடியும். இதற்கு காரணம் அந்த தூதர்கள்தான் அவனது பண்புகளை வெளிப்படுத்து -பவர்களாக இருக்கின்றனர். எந்தவொரு பொருளின் இருப்பையும் அதன் பண்புகள் இல்லாமல் நிரூபித்துக் காட்ட முடியாது. எனவே, இறைவனின் பண்புகள் பற்றிய அறிவு இல்லாமல் இறைவனைப் பற்றிய ஞானமும் குறையுள்ளதாகி விடுகின்றது. உதாரணமாக இறைவனின் இந்த பண்புகள் இருக்கின்றன. அதாவது அவன் பேசுகின்றான். கேட்கின்றான். மறைவான விஷயங்களை அறிகின்றான். கருணை காட்டுவதற்கோ தண்டனை வழங்குவதற்கோ ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றான். அவனது இந்தப் பண்புகளை தூதர் மூலமாக அல்லாமல் எவ்வாறு நாம் தெரிந்து கொள்ள முடியும்? எவ்வாறு அவற்றின் மீது நமகது நம்பிக்கை ஏற்பட முடியும்? இந்தப் பண்புகளை வெளிப்படையாக நாம் காண்பதன் மூலமாக நிரூபிக்காவிட்டால் இறைவன் இருக்கின்றான் என்பதையே நிரூபிக்க முடியாது. அவ்வாறிருக்க, அவற்றின் மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம் என்பதில் என்ன பொருள் இருக்கின்றது? எந்த நபர் இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் அவனது பண்புகள் மீதும் நம்பிக்கை கொள்வது அவசியமானதாகும். இந்த அவரது நம்பிக்கை நபிமார்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்திற்கு அவரை ஆளாக்கி விடும். ஏனென்றால், உதாரணத்திற்கு இறைவன் உரையாடுகின்றான்; பேசுகின்றான் என்பதை அவனது வசனங்கள் மூலமாக நிரூபிக்காத வரை எவ்வாறு அவற்றை நாம் புரிய முடியும்? அந்த இறைவனின் வார்த்தைகளை அவற்றின் ஆதாரங்களுடன் எடுத்துக் கூறுபவர் நபி மட்டுமே ஆவார்.

பிறகு திருக்குர்ஆனில் இரு வகையிலுள்ள வசனங்கள் உள்ளன என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றில் ஒன்று முஹ்கமாத். அதாவது அடிப்படையான உறுதியான வசனங்களாகும். இரண்டாவது முதஷாபிஹாத். அதாவது உவமை வடிவிலுள்ள வசனங்களாகும். உதாரணமாக,

الَّذِينَ يَكْفُرُونَ بِاللّٰهِ وَرُسُلِهِ وَيُرِيدُونَ أَنْ يُفَرِّقُوا بَيْنَ اللّٰهِ وَرُسُلِهِ وَيَقُولُونَ نُؤْمِنُ بِبَعْضٍ وَنَكْفُرُ بِبَعْضٍ وَيُرِيدُونَ أَنْ يَتَّخِذُوا بَيْنَ ذَٰلِكَ سَبِيلًا ۝ أُولَٰئِكَ هُمُ الْكَافِرُونَ حَقًّا ۚ وَأَعْتَدْنَا لِلْكَافِرِينَ عَذَابًا مُهِينًا ۝

அதாவது, எவர்கள் இறைவன் மீதும் அவனது தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்வதை விரும்புவதில்லையோ மேலும் இறைவனை அவனது தூதர்களை விட்டும் பிரித்து விட விரும்புகின்றரோ, மேலும் சிலவற்றின் மீது நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். சிலவற்றின் மீது நாங்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்று கூறுகின்றனரோ அதாவது இறைவன் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். தூதர்கள் மீது நாங்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்று கூறுகின்றனரோ அல்லது சில தூதர்கள் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். சில தூதர்கள் மீது நாங்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்று கூறுகின்றனரோ, மேலும் இவ்விரண்டிற்கும் நடுவிலுள்ள ஒரு வழியைக் கடைபிடிக்க எண்ணுகின்றனரோ உண்மையில் அத்தகைய மக்களே காஃபிர்கள் ஆவர்; உறுதியான காஃபிர்கள் ஆவர். நாம் நிராகரிப்பவர்களுக்காக இழிவுபடுத்தக்கூடிய தண்டனையை ஆயத்தம் செய்து வைத்துள்ளோம் என்ற இந்த வசனங்கள் அடிப்படையான உறுதியான வசனங்களாகும். இந்த வசனங்களைப் பற்றிய விரிவான விளக்கத்தை ஏற்கனவே நாம் எழுதியுள்ளோம்.

இரண்டாவது வகையிலுள்ள வசனங்கள் முதஷாபிஹாத் என்னும் உவமை வடிவிலுள்ள வசனங்களாகும். அவற்றின் பொருள் மிகவும் நுட்பமானதாகும். ஞானம் பெற்ற மக்களுக்கு இதைப் பற்றிய அறிவு வழங்கப்படுகின்றது. எந்த மக்களது உள்ளங்களில் நயவஞ்சகத்தின் நோய் இருக்கின்றதோ அவர்கள் அடிப்படையான உறுதியான வசனங்களை சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் உவமை வடிவிலுள்ள வசனங்களைப் பின்பற்றிச் செல்கின்றனர். முஹ்கமாத் என்னும் அடிப்படையான உறுதியான

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்றிலிருந்து யூ.கே -வின் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ்வின் இஜ்திமா ஆரம்பமாகின்றது. நமது இஜ்திமாவின் உண்மையான ஆன்மா அல்லது எதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டுமோ அது இதுதான். அதாவது, அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் அன்பு மற்றும் சகோதரத்துவத்தில் முன்னேற வேண்டும். அறிவு சார்ந்த நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நாம் இவற்றிலிருந்து சில விஷயங்களைக் கற்று அதனை நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்க வேண்டும் என்பதற்காக இருக்க வேண்டும். சில விளையாட்டுப் போட்டிகளும் நடக்கின்றன. எனவே, அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்கு ஆரோக்கியமான உடலின் தேவை இருக்கின்றது. அது அல்லாமல் அன்ஸாருல்லாஹ்வின் வயது விளையாடுகின்ற வயது அல்ல. அவ்வாறே பொதுவாக 22 அல்லது 23 வயதிற்குப் பிறகு பெண்களுக்கு அதிகமாக விளையாட்டுகளில் ஆர்வம் இருப்பதில்லை.

அன்ஸாருல்லாஹ், லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகள் பற்றிய சுருக்கம் அவர்கள் தமது கூட்டங்களில் திரும்பத் திரும்ப கூறுகின்ற அந்த உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த உறுதிமொழிகளை சான்றாகக் காட்டியவாறு அன்ஸாருல்லாஹ், லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் நாஸிராத்துல் அஹ்மதிய்யாவிற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழங்கியுள்ள முக்கியமான பொன்னான போதனைகள்

யூ.கே -வைச் சார்ந்த மிகவும் அன்பான ஒரு மாணவர் மர்ஹூம் மஸ்ஹர் அஹ்ஸன் அவர்களது நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா ஹாஸிர் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது. இந்த மாணவர் புற்று நோயிலிருந்து குணமடைந்த பிறகு நெஞ்சில் ஏற்பட்ட Infection காரணமாக வ.'.பாத் ஆகி விட்டார். மர்ஹூம் அவர்களின் பல்வேறு சிறப்புகளை ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**30 செப்டம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **30 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

இன்றிலிருந்து யூ.கே –வின் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ்வின் இஜ்திமா ஆரம்பமாகின்றது. நமது இஜ்திமாவின் உண்மையான ஆன்மா அல்லது எதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டுமோ அது இதுதான். அதாவது, அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் அன்பு மற்றும் சகோதரத்துவத்தில் முன்னேற வேண்டும். அறிவு சார்ந்த நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நாம் இவற்றிலிருந்து சில விஷயங்களைக் கற்று அதனை நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்க வேண்டும் என்பதற்காக இருக்க வேண்டும். சில விளையாட்டுப் போட்டிகளும் நடக்கின்றன. எனவே, அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்கு ஆரோக்கியமான உடலின் தேவை இருக்கின்றது. அது அல்லாமல் அன்ஸாருல்லாஹ்வின் வயது விளையாடுகின்ற வயது அல்ல. அவ்வாறே பொதுவாக 22 அல்லது 23 வயதிற்குப் பிறகு பெண்களுக்கு அதிகமாக விளையாட்டுகளில் ஆர்வம் இருப்பதில்லை. எனவே, விளையாட்டுப் போட்டிகளின் நோக்கம் உடல் ஆரோக்கியத்தின் பக்கம் கவனம் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இருக்கின்றது. போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் மட்டும் அல்லாமல் மற்றவர்கள் கூட உலாவுவதற்காக செல்வது, சிறிய உடற்பயிற்சிகளைச் செய்வது ஆகியவற்றின் மூலம் தங்களது உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும். அசல் விஷயம், எந்நிலையிலும் இந்த இஜ்திமாக்களின் நோக்கம் நாம் நமது மார்க்கம் மற்றும் அறிவின் தகுதிகளை வளர்த்துக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்துவதாகும். சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அவர்கள் குத்பாவில் அன்ஸார்களுக்கு சில விஷயங்களைக் கூறும்படி என்னிடம் கூறினார்கள்.

அன்ஸாருல்லாஹ்வின் வயது எத்தகையதொரு வயது என்றால் அதில் மனிதனின் எண்ணம் வலுப்பெற்றிருக்கும். உறுதியாக இருக்கும். மேலும் சுயமே அவர்களுக்கு அவர்களது பொறுப்புகள் குறித்த உணர்வு இருக்க வேண்டும். இந்த பொறுப்புகளின் பக்கம் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். உறுதியான வயதை அவர்கள் அடைந்திருப்பது மற்றும் அவர்களது மஜ்லிஸிற்கு அன்ஸாருல்லாஹ் என்ற பெயர் வைக்கப்பட்டிருப்பது மஜ்லிஸின் ஒவ்வோர் உறுப்பினருக்கும், 40 வயதைக் கடந்த ஒவ்வோர் அஹ்மதி ஆணுக்கும் அவர்களது பொறுப்புகள் தொடர்பான உணர்வை ஏற்படுத்துவதற்கு போதுமானதாகும். ஒரு நாஸிர் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் என்ன? என்பதைப் பற்றிய சுருக்கம் அன்ஸாருல்லாஹ்வின் உறுதிமொழியில் கூறப்பட்டிருக்கின்றது.

முதல் விஷயம் அன்ஸாருல்லாஹ்வின் உறுப்பினராக இருக்கக் கூடிய ஒவ்வொரு நபரும் இஸ்லாத்தை வலுப்படுத்துவதற்கும் அஹ்மதிய்யத்தில் உண்மையான உள்ளத்துடன் நிலைத்திருப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்தின் வலிமைக்காக நாம் செய்யும் முயற்சி நமது அறிவு மற்றும் சக்தியால் நடைபெறாது. இஸ்லாம் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட மார்க்கமாகும். தனது போதனைகளின் அடிப்படையில் அது மிகச் சிறந்த முழுமையான மார்க்கமாகும். இதில் எந்தவொரு மனிதனும் வேறு எந்தவொரு வலிமையையும் உருவாக்க வேண்டியதில்லை. எனினும், சுயமே மனிதன் இஸ்லாத்துடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலமாக இந்த சிறந்த முழுமையான மார்க்கத்தின் உறுதியான அங்கமாக நாம் ஆக முடியும். இந்த விஷயம் இறைவனுடன் உறுதியான தொடர்பு இல்லாமல் உருவாக முடியாது. இதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். அன்ஸாருல்லாஹ்வின் தரம் மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்பு உருவாகாத வரை அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட முடியாது. இதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூதும் ஸலாமும் ஓதும்படி கட்டளையிட்டுள்ளான். இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இது மிகவும் அவசியமான விஷயமாகும். பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்திற்கான உரிமையை நாம் செலுத்த வேண்டும். இந்த உரிமை நிலைநாட்டப்படும்போதுதான் அஹ்மதிய்யத்தில் உண்மையான உள்ளத்துடன் நாம் நிலைத்திருப்போம். இந்தக் காலத்தில் அல்லாஹ் இஸ்லாத்தைப் பரப்புவதை நிறைவடையச் செய்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். இஸ்லாத்தைப் பரப்புவதிலும் அதை பிரச்சாரம் செய்வதிலும் முழுமையாக ஈடுபட்டவாறு தம்மைத்தாமே அன்ஸாருல்லாஹ்வாக நிரூபித்துக் காட்டும்போதுதான் நீங்கள் அஹ்மதிய்யத்தில் உண்மையான உள்ளத்துடன் நிலைத்து நிற்கின்றீர்கள் என்பது நிரூபணமாகும். எனவே, இது உங்களது ஒரு பொறுப்பாக இருக்கின்றது. பிறகு தமது உறுதிமொழியில் அன்ஸார் இவ்வாறும் உறுதிமொழி எடுத்துள்ளனர் அல்லது வேறு சொற்களில் சொல்வதாக இருந்தால் இந்த பொறுப்பை சுமப்பதற்கான மற்றும் அதை நிறைவேற்றுவதற்கான வாக்குறுதியையும் அறிவிப்பையும் நீங்கள் செய்துள்ளீர்கள்.

அதாவது, அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் நன்றியுணர்வுள்ளவர்களாகவும் அதை பாதுகாப்பதற்கு முயற்சி செய்பவர்களாகவும் இருப்போம் என்று நீங்கள் உறுதிமொழி கூறியுள்ளீர்கள். இந்த முயற்சி எப்படி நடக்கும்? அன்ஸார் கிலாஃபத்தின் பணிகளையும் அது தருகின்ற நிகழ்ச்சிகளையும் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அதன் உதவியாளர்களாக ஆகும் போதுதான் இந்த முயற்சி நடக்கும். காலத்தின் கலீஃபா கூறும் விஷயங்களைக் கேட்பதன் பக்கம் அன்ஸார் கவனம் செலுத்தும்போதுதான் இந்த முயற்சி நடக்கும். இதற்காக அல்லாஹ் நமக்கு இக்காலத்தில் M.T.A என்ற அருளையும் வழங்கியுள்ளான். தூரத்தில் அமர்ந்தவாறு இந்த விஷயங்களை நம்மால் கேட்க முடிகிறது. எனவே, இதனுடன் தங்களை இணைத்துக் கொள்வது அன்ஸார்களுக்கு அவசியமானதாகும். எங்களது சந்ததிகளை கிலாஃபத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆக்குவோம் என்று அன்ஸார் உறுதிமொழி எடுத்திருக்கின்றனர். ஏனைய தர்பிய்யத் விஷயங்களை தவிர்த்து உங்களது சந்ததிகளையும் கிலாஃபத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆக்கி விடுங்கள். அதன் மூலமாக ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறை வரை தொடர்ந்து இந்த நன்றியுணர்வுள்ள தொடர்பு

நிலைத்திருக்க வேண்டும். அதன் மூலமாக இஸ்லாத்தைப் பரப்புகின்ற பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு அவர்களது அறிவிப்பிற்கேற்ப இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றத்தின் மூலமாக நிகழ இருக்கின்றது. அது கிலாஃபத் அமைப்பாகும். எனவே, இதற்காக எல்லா விதமான தியாகங்களும் செய்வதாக நீங்கள் செய்துள்ள உறுதிமொழியைக் கண்முன் நிறுத்துங்கள். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இவ்வாறே நான் ஏற்கனவே கூறியது போன்றே லஜ்னா இமாயில்லாஹ்வின் இஜ்திமாவும் நடக்கின்றது. லஜ்னா இமாயில்லாஹ்விற்கும் ஓர் உறுதிமொழி இருக்கின்றது. அதை அவர்கள் எப்போதும் அவர்களுக்கு முன்னால் வைத்திருக்க வேண்டும். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளும் பேருபகாரமுமாகும். அவனது அருளால் லஜ்னா இமாயில்லாஹ்விலுள்ள பெரும்பாலார் மார்க்கத்தில் நன்றியுணர்வுடன் நிலைத்திருக்கின்றனர் – மாஷா அல்லாஹ். கொள்கை அடிப்படையில் பெரும்பாலார் வலுவுடன் இருக்கின்றனர். ஆனால், லஜ்னாவின் ஒவ்வோர் உறுப்பினரும் ஒவ்வோர் அஹ்மதி பெண்ணும் தங்களது செயல்களின் தரத்தை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்கேற்ப அமைத்துக் கொள்ள வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியது போன்றே லஜ்னா இமாயில்லாஹ்விற்கும் ஓர் உறுதிமொழி இருக்கின்றது. அவர்களது நிகழ்ச்சிகளிலும் இஜ்திமாக்களிலும் இந்த உறுதிமொழியை திரும்பத் திரும்ப அவர்கள் கூறுகின்றனர். அதாவது, எங்களது மார்க்கத்திற்காக ஒவ்வொரு தியாகத்தையும் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். மார்க்கம் அவர்களிடம் கேட்கின்ற முதல் தியாகம் இதுவாகும். அதாவது, அவர்கள் தமது எல்லா உலக விருப்பங்களையும் பின்னால் தள்ளி விட்டு விட்டு தங்களது செயலளவிலான நிலைமைகள் மார்க்கத்தின் போதனைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டும். ஓர் அஹ்மதி பெண்ணிடம் உண்மையின் உயர்வான தரம் நிலைபெற்றிருக்க வேண்டும். பிறகு பெண்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பெண் தனது புனிதத் தன்மையையும் தனது கற்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லாஹ் கூறியுள்ள விஷயங்களில் பர்தாவைப் பேணுவதை அல்லாஹ் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக ஆக்கியுள்ளான். ஏதாவது ஓர் அஹ்மதி பெண்ணுக்கு இவ்விஷயத்தில் பலவீனம் இருந்தால் அந்தப் பெண் செயலளவில் தான் கூறிய உறுதிமொழியை நிறைவேற்றாமல் இருக்கின்றார். சமுதாயத்தின் மீதுள்ள அச்சமோ அல்லது தனது உலக விருப்பங்களோ ஓர் அஹ்மதியை மார்க்கத்தின் போதனைகளிலிருந்து தூரமாக விலக்கிக் கொண்டு செல்பவையாக இருக்கக் கூடாது. மாறாக, ஒவ்வோர் அஹ்மதி பெண்ணும் தனது செயலளவிலான நிலைமையை அல்லாஹ் வழங்கியுள்ள போதனைகளுக்கேற்ப அமைத்துக் கொள்பவராக இருக்க வேண்டும்.

எப்போதும் உண்மையில் நிலைத்திருப்போம் என்னும் உறுதிமொழியில் கூறுகின்றனர். இதில் ஒவ்வொருவரும் தங்களது தரத்தைப் பார்க்க வேண்டியது அவசியமானதாகும். உண்மையில் உண்மையான ஆன்மாவைப் பேணியவாறு நாம் அதில் நிலைத்து நிற்கின்றோமா? என்று பார்க்க வேண்டும். இவ்வாறே சந்ததிகளுக்கு தர்ப்பிய்யத் வழங்குவதாக உறுதிமொழி எடுக்கின்றோம். இதையும் முழுமையாக நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் மார்க்கத்துடன் தொடர்புள்ளவர்களாக இருக்கின்றார்களா? என்று பார்க்க வேண்டும். தமது குழந்தைகளுக்கு மிகவும் உயர்வான தர்ப்பிய்யத்தை வழங்குபவர் அந்த குழந்தைகளின் தாய் ஆவார். இதற்காக தாய்மார்கள் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இந்த பொறுப்புகளை நிறைவேற்றக் கூடியவர்களாக நமது எல்லா பெண்களும் இருந்தால் இன்னும் சொல்வதென்றால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியதற்கேற்ப ஐம்பது சதவீதம் பெண்கள் இவ்வாறிருந்தால் பிறகு அடுத்த தலைமுறைகளைப் பாதுகாப்பதற்கு அவர்கள் உத்தரவாதம் வழங்கக் கூடியவர்களாக ஆகி விடுவர். (லஜ்னா இமாயில்லாஹ் சன்ஜீத்கீ ஸே அவ்ரதோன் கீ இஸ்லாஹ் கரே(ன்). அன்வாருல் உலூம் தொகுதி 17, பக்கம் 296)

அந்தக் குழந்தைகளின் மார்க்கத்தைப் பாதுகாப்பவர்களாக அவர்கள் இருப்பர். அவர்களுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துபவர்களாக அவர்கள் ஆகி விடுவர். இவ்வாறு தமது குழந்தைகளிடம் தமது சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தியாகம் செய்வதற்கான உணர்வை உருவாக்குவதும் கூட தாய்மார்களின் பணியாகும். இவையெல்லாம் நீங்கள் செய்யும் உறுதிமொழியில் கூறப்பட்டிருக் –கின்றது. அந்த சந்ததிகளின் மூளையில் முழுமையான முறையில் சட்டங்களைப் பேணுவதற்காக அவர்களை அதற்காக ஆயத்தப்படுத்துவது தாய்மார்களின் பணியாகும். தீமைக்கும் நன்மைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை உணர வைப்பது தாய்மார்களின் பணியாகும். நாட்டின் முன்னேற்றத்திற்காக தமது பங்கை செலுத்துவதும் அதன் பக்கம் கவனமூட்டுவதும் தாய்மார்களின் பணியாகும். கிலாஃபத்தோடு குழந்தைகளை இணைத்து வைப்பதும் அதற்காக முயற்சி செய்வதும் எவ்வாறு தந்தையர்களின் பணியாக இருக்கின்றதோ அவ்வாறே அது தாய்மார்களின் பணியாகவும் இருக்கின்றது. எனவே, இந்த முக்கியமான பொறுப்பை ஒவ்வொரு தாயும் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இவ்வாறே லஜ்னாவுடன் சேர்த்து நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாவும் நடைபெறுகின்றது. நாஸிராத்தும் உறுதிமொழி எடுக்கின்றனர். அவர்களும் தங்களது உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். 14 அல்லது 15 வயது விழிப்புணர்வுள்ள ஒரு வயதாக இருக்கின்றது. நல்லதையும் தீயதையும் புரிந்து கொள்கின்ற வயதாக அது இருக்கின்றது. இது நாஸிராத் வயதின் இறுதிக் கட்டமாகும். இந்த வயதில் அவர்களுக்கு பல ஆசைகள் இருக்கும். உலகின் பக்கம் பார்வை இருந்தால் பிறகு உலக விருப்பங்கள் மார்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி விடும். எனவே, ஒவ்வோர் அஹ்மதி சிறுமியும் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது அவசியமானதாகும். தனது உறுதிமொழியை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலமாக ஒவ்வோர் அஹ்மதி சிறுமியும் வீணான உலக விருப்பங்களுக்குப் பின்னால் செல்வதற்குப் பகரமாக உயர்வான நோக்கங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும். இந்த உயர்வான நோக்கங்கள் நாஸிராத் உறுதிமொழியில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது. அதாவது மார்க்கம், சமுதாயம், நாடு ஆகியவற்றிற்காக தொண்டு செய்வதற்குத் தயாராக இருப்பது எப்போதும் உண்மையில் நிலைத்திருப்பது, அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக எல்லா தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக இருப்பது ஆகிய இந்த விஷயங்கள் அடங்கியுள்ள உறுதிமொழியை அவர்கள் தங்களது வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்கி விட்டால் எங்கு அவர்கள் தங்களது வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்வார்களோ அங்கு வருங்கால சந்ததிகளின் வாழ்க்கையை பாதுகாப்பவர்களாகவும் அவர்கள் ஆகி விடுவர். அவர்களை கிலாஃபத்தோடு இணைப்பவர்களாக அவர்கள் ஆகி விடுவர். அல்லாஹ் இவர்களுக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! நடைபெறுகின்ற இஜ்திமாக்களை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

இஜ்திமா தொடர்பாக சுருக்கமாக இந்த விஷயங்களைக் கூறிய பிறகு நான் அன்பிற்குரிய ஒருவரின் நன்மைகளை எடுத்துக் கூற விரும்புகின்றேன். கடந்த சில நாட்களுக்கு முன் இவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். சில வாரங்களுக்கு முன்னால் ஒரு விபத்தின் விளைவாக நமது அன்பிற்குரிய ஒரு மாணவர் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். சில நாட்களுக்கு முன் யூ.கே–விலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மிகவும் நேசத்திற்குரிய ஒரு மாணவர். இந்த இளைஞர் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் தமது கல்வியை ஏறக்குறைய நிறைவு செய்திருந்த நிலையில் கொஞ்ச காலம் நோய்வாய்ப்பட்டிருந்த பிறகு நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

எந்த இளைஞரைப் பற்றி நான் குறிப்பிடுகின்றேனோ அவரது பெயர் மஸ்ஹர் ஹஸன் ஆகும். நோயின் காரணத்தால் இறுதி வருடத்தின் தேர்வை அவர் எழுதவில்லை. ஆனால், எவ்வாறு இந்தப் பிரியத்திற்குரிய இளைஞர் தமது வாழ்வைக் கழித்துள்ளார் என்றால் அதைப் பார்க்கும்போது அவர் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும் அவர் ஒரு முரப்பியாகவும் முபல்லிக் ஆகவும் இருந்திருக்கின்றார். அல்லாஹ் இந்த இளைஞருக்குள் எவ்வாறு மார்க்கத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதைப் பற்றிய ஓர் உணர்வை உருவாக்கி இருந்தான் என்றால் தனது ஒழுக்கத்தையும் நிலைமையையும் அல்லாஹ் கூறியுள்ள கட்டளைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கேற்ப செயல்பட வேண்டும் என்பதைப் பற்றிய ஓர் உணர்வை அல்லாஹ் அவரிடம் உருவாக்கி இருந்தான். உலகில் வருகின்ற ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் இங்கிருந்து செல்ல வேண்டியது வரும். ஆனால், எவர்கள் தங்களது வாழ்க்கையை இறைவனின் விருப்பத்திற்கேற்ப வடிவமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றனரோ அவர்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றனர். அதில் அவர்கள் வெற்றியும் பெறுகின்றனர். இந்தப் பிரியமான மாணவர் தொடர்பாக ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர்கள், அவரது நண்பர்கள், அவரது ஆசிரியர்கள் ஆகியோர் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். வஃபாத்தான ஒரு நபரின் நன்மையை எடுத்து கூறுவது ஒரு சடங்கல்ல. மாறாக, சுயமாக எனக்கு தெரியும். அந்த மாணவர் கலப்பற்ற மனத்தூய்மையிலும், நன்றியுணர்விலும் தனது செலிலும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அல்லாஹ் அவரது தகுதிகளை உயர்த்திக் கொண்டே இருப்பானாக!

மர்ஹூம் பெற்றோர்களுக்கு ஒரே மகனாவார். அவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். பெற்றோர்களும் குறிப்பாக அவரது தாயார் அவர்களும் பொறுமையைக் கடைபிடிப்பதிலும் அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி அடைவதிலும் சிறந்த முன்மாதிரியைக் காட்டியுள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் நற்கூலி வழங்குவானாக! அவர்களை பொறுமையில் முன்னேறும்படி செய்வானாக! இவர்கள் அனைவருக்கும் தன் தரப்பிலிருந்து நிம்மதி மற்றும் பொறுமைக்கான வழிவகைகளை ஏற்படுத்துவானாக!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''நினைவில் கொள்ளுங்கள். துன்பத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதைப் போன்ற நிம்மதியையும் சுகத்தையும் தரக்கூடிய எந்தவொரு மருந்தும் இல்லை.'' (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 45) எனவே, அல்லாஹ்வின் மீதே எப்போதும் நம்பிக்கை வைக்க வேண்டும். மர்ஹூம் கூட பொறுமை மற்றும் தைரியமாக இருப்பதைப் பற்றி போதனை செய்தவாறு இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார். இதனால் துக்கமும்

துயரமும் ஏற்படுகின்றது. இது ஓர் இயல்பான விஷயமாகும். பெற்றோர்களுக்கும் சகோதரிகளுக்கும் சகோதரர்களுக்கும் எல்லாரையும் விட அதிகமாக துக்கம் இருக்கும். ஆனால், இந்த துக்கத்தையும் துயரத்தையும் துஆக்களாக மாற்றி அதனை மர்ஹூமின் தகுதிகள் உயர்வதற்கும் நமக்கு பொறுமையும் நிம்மதியும் கிடைப்பதற்கும் உள்ள ஒரு வழியாக ஆக்கிக் கொள்ள முடியும். அல்லாஹ் இவருக்கு நெருக்கமானவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

அவரை பற்றிய சில விஷயங்களைக் கூறுகின்றேன். இந்த இளைஞருக்கு புற்றுநோய் இருந்தது. அல்லாஹ்வின் அருளால் அதற்கான சிகிச்சை செய்யப்பட்ட பிறகு அவர் குணமடைந்தார். ஆனால், அதற்குப் பிறகு நெஞ்சில் ஓர் இன்ஃபெக்ஷன் ஏற்பட்டது. அது பற்றி மருத்துவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் அவரது வஃபாத் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமின் கொள்ளு தாத்தாவான ஹஸ்ரத் மிஸ்ரி நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். இவரது பாட்டனாரான சவுத்ரி முனவ்வர் அலி கான் சாஹிப் அவர்கள் மற்றும் தாத்தாவான ஹாஜி மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஆகிய இருவரும் காதியானின் தர்வேஷ்கள் ஆவர். நான் ஏற்கனவே கூறியது போன்று இவர் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவராக இருந்தார். இவர் வஸிய்யத்தும் செய்திருந்தார். சுருக்கமாக விஷயங்களை எடுத்துக் கூறுவேன். மிக விளக்கமாக இத்தகைய சில உணர்வுப்பூர்வமான விஷயங்களை எடுத்துக் கூறுவது கடினமாகும். எனவே, சுருக்கமாக அவற்றை எடுத்து கூறுவேன்.

இவரது தாயார் கூறுகின்றார்கள்: எனக்கு ஆலோசனை வழங்கக் கூடியவராகவும் எனது இரகசியங்களை அறிந்தவராகவும் ஓர் ஆசிரியரைப் போன்று எனக்கு தர்பிய்யத் வழங்குபவராகவும் அவர் இருந்தார். தாய், மகன் என்ற உறவுடன் எங்களுக்கிடையில் ஒரு தனிப்பட்ட புரிதல் இருந்து வந்தது. அவர் என்னையும் நான் அவரையும் நன்றாகப் புரிந்திருந்தோம். எனது தாய்க்கு எந்த விஷயங்களில் மகிழ்ச்சி ஏற்படும். எதில் அவர்களுக்கு வெறுப்பு ஏற்படும் என்பதைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பெரும்பாலும் என்னிடம் கிலாஃபத், ஜமாஅத் அமைப்பு பற்றிய விஷயங்களையும் காலத்தின் கலீஃபா, எல்லாவற்றையும் விட அதிகமாக ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களது தோழர்கள், அன்னாரது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆகியோரைப் பற்றிய விஷயங்களையும் அவர் பேசி வந்தார். இந்த தலைப்புகளே அவருக்கு பிரியமானவையாக இருந்தன. உலக விஷயங்கள் பற்றிய பேச்சுக்கள் இடையில் வந்து விட்டால் இவற்றை விட்டு விடுங்கள். இவற்றுடன் நமக்கு என்ன தொடர்பு இருக்கின்றது? என்று கூறுவார். என்னை ஜமாஅத் பணிகளைச் செய்ய வையுங்கள் என்று கூறினார். பிறகு அவர் News Letters எழுத ஆரம்பித்தார். பணி செய்கின்ற மற்றவர்களுடனும் அவருக்கு தொடர்பு இருந்து வந்தது. எவ்வாறு பணி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அவர்களுக்கு கூறி வந்தார். ஸ்காட்லாந்தில் லஜ்னா மற்றும் நாஸிராத்துகளுக்கான இஜ்திமா நடைபெற்ற போது அவர்களுக்காக இவர் சான்றிதழ்களை டிஸைன் செய்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய நூல்களைத் தொடர்ந்து படித்து வந்தார்.

அவரது தாயார் கூறுகின்றார்கள்: செப்டம்பர் 12 –ஆம் தேதி இரண்டாவது முறை இன்ஃபெக்ஷன் ஏற்பட்டபோது என்னை அழைத்து எனக்கு அருகில் வந்து அமருங்கள் என்று கூறினார். பிறகு அல்லாஹ்வின் அருள்களை உங்கள் விரல்களால் எண்ணுங்கள் என்று கூறினார். பிறகு அல்லாஹ்வின் அருள்களை எண்ண ஆரம்பித்தார். பிறகு மேலும் அவனது அருள்களை எண்ணுங்கள் என்று கூறினார்.

அவரது தாயார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் என் மீது எந்த அளவு அருள் செய்துள்ளான் என்றால் அதை என்னால் எண்ண முடியாது என்று நான் கூறினேன். அதற்கு மஸ்ஹர் உங்களுக்கு நான் இதைத்தான் கூற விரும்பினேன். அல்லாஹ்வின் அருள்களை எப்போதும் நினைவில் வையுங்கள். எல்லா நிலைமையிலும் அவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருங்கள் என்று கூறினார்.

அவரது தாயார் கூறுகின்றார்: மஸ்ஹர் என்ன சொல்கின்றார் என்று அப்போது எனக்கு புரியவில்லை. ஆனால் எந்நிலையிலும் மனதளவில் அவர் என்னை ஆயத்தப்படுத்தி வந்தார்.

அவரது தாயார் கூறுகின்றார்: தப்ஷீர் தரப்பிலிருந்தும் விருந்தினர்கள் வந்த சமயத்தில் இறுதியாக வந்த அந்த குழுவின் இன்சார்ஜ் ஆக ராஜா புர்ஹான் சாஹிப் அவர்கள் இருந்தார்கள். அவர் மஸ்ஹரை சந்தித்து அவரது உடல் நலம் நன்றாக இருக்கின்றது என்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அப்போது நான் முரப்பி சாஹிப் மஸ்ஹரிக்கு ஜமாஅத் பணிகளை செய்வதில் பேரார்வம் இருக்கின்றது. எல்லா சமயங்களிலும் வருங்காலத்தில் நான் இவ்வாறு செய்வேன். இதைச் செய்வேன் என்று திட்டம் தீட்டிக் கொண்டே இருக்கின்றார். முரப்பி ஆகி விட்டால் இதைச் செய்வேன் என்று கூறுகின்றார் என்று நான் கூறினேன்.

2015 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இவருக்கு Diagonise செய்யப்பட்டு கேன்ஸர் இருப்பது தெரிய வந்தபோது தனது சகோதரியிடம் தாயாருக்கு மிகுந்த எச்சரிக்கையுடன் இதைப் பற்றி கூற வேண்டும். அவர்கள் அழுவதை என்னால் பார்க்க முடியாது என்று கூறினார். மருத்துவமனையில் தொழுகைகளை நிறைவேற்றுவது, திருக்குர்ஆன் ஓதுவது, M.T.A –வில் குத்பாக்களைக் கேட்பது ஆகியவை கண்டிப்பாக இருந்து வந்தது. Online நிகழ்ச்சிகளில் நஸ்ம்கள் கேட்பது புகைப்படங்கள் எல்லாவற்றையும் பார்ப்பது ஆகியவை இருந்தது. வகுப்பிலுள்ள நண்பர்களுடனும் ஆசிரியர்களுடனும் பேசி வந்தார். மருத்துவர்களிடமும், நர்ஸ்களிடமும் ஜமாஅத்தைப் பற்றி தப்லீக் செய்யும் விஷயங்கள் பற்றி பேசினார். பெரும்பாலான நேரங்களில் எப்போதும் மருத்துவமனையில் அமர்ந்திருந்தவாறே தனக்குரிய சிகிச்சையைச் செய்ய வைத்தார். மருத்துவர்களுக்கு Peace Conference மற்றும் மாநாடுகள், ஜமாஅத்தின் பல்வேறு தொண்டுகள் ஆகியவற்றை சான்று காட்டி எப்போதும் தப்லீக் செய்து கொண்டிருந்தார்.

இங்கு மாநாட்டிற்குப் பிறகு முரப்பிகளின் மீட்டிங் நடந்தபோது ஜாமிஆவில் தேர்ச்சி பெற்றவர்கள் அதில் பங்கு பெற்றனர். அவர்களுக்கு இவர் தனது தூதுச் செய்தியை எழுதி அனுப்பினார். அதில் மீட்டிங்கில் பேசப்பட்ட முக்கியமான விஷயங்களை தனக்கு எழுதி அனுப்பும்படி கூறினார். அதை நான் எனது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்வேன் என்று கூறினார். ஏனென்றால் அவரால் மீட்டிங்கில் கலந்து கொள்ள முடியவில்லை. கிலாஃபத்தின் மீது அளவு கடந்த அன்பு அவருக்கு இருந்தது. அன்பிற்குரிய மாணவர் ரிஸா அவர்களது மரணம் பற்றி அவருக்கு தெரிய வந்ததும் நான் இவ்வாறு முதன் முறையாக அவர் அழுததைப் பார்த்தேன். நான் முதலில் பதற்றடைந்தேன். திடீரென்று இந்த மரணம் ஏற்பட்டதால் அவரது பெற்றோர்களுக்கும் காலத்தின் கலீஃபாவிற்கும் பெரும் துக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்ற கவலையே அவருக்கு இருந்தது என்று அவரது தாயார் கூறுகின்றார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: நாம் நமது இறைவனின் விருப்பத்தில் திருப்தி அடைகின்றோம். அவர் அல்லாஹ்விற்குரியவராக ஆகி விட்டான். துஆ செய்வதே நமது பணியாகும். அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதும் இறைவனின் பணியாகும்.

அவரது தாயார் கூறுகின்றார்கள்: மஸ்ஹர் எங்களை விட்டுப் பிரிந்து செல்லும் போது கூட எங்களிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார்.

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 –ஆம் தேதி பெருநாளன்று மஸ்ஹருக்கு கடுமையாக இருமல் இருந்தது. அவர் என்னிடம் Black Tea தயார் செய்யுமாறு கூறினார். படுக்கையில் சென்று படுத்தார். நான் பார்த்த போது அவருக்கு கடுமையான காய்ச்சல் இருந்தது. அப்போது நான் Ambulance –ஐ வரவழைத்தேன். அவர் அதில் ஏறிச் செல்லும் போது மீண்டும் என்னிடம் இன்று பெருநாளாகும். நீங்கள் பெருநாள் தொழுகையை தொழச் செல்லுங்கள். மருத்துவமனைக்கு என்னுடன் வரவேண்டிய தேவை இல்லை. சிறிது நேரம் கழிந்த பிறகு ஃபோன் மூலமாக நான் உங்களை அழைப்பேன். நான் மருத்துவமனைக்குச் சென்று ஃபோன் மூலமாக பெருநாள் குத்பாவைக் கேட்பேன் என்று கூறினார். தனக்கு நோய் இருந்த சமயத்தில் கூட அவர் இந்த விஷயங்களை நினைவில் வைத்திருந்தார்.

மஸ்ஹரின் குரல் மிகவும் நன்றாக இருந்தது. ஃபஜ்ர் தொழுகையில் தொழுவதற்காக அல்லது தஹஜ்ஜுத்திற்காக எழுவதற்கு அவரது சகோதரி அலாரம் வைத்திருந்தார். போனில் அவரது குரலை அவரது சகோதரி பதிவு செய்து வைத்திருந்தார். அவர் மரணத்திற்கு முன்பு இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருந்த சமயத்தில் போனில் திடீரென்று அவரது குரலில் பதிவு


**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


**திருக்குர்ஆனிலிருந்து**

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

செய்யப்பட்டிருந்த பாங்கின் ஒலி கேட்க ஆரம்பித்தது. அது இவர்களை மேலும் உணர்ச்சிவசப்பட வைத்து விட்டது. ஆனால் எந்நிலையிலும் இதுவே அல்லாஹ்வின் விருப்பமாக இருந்தது.

எண்ணற்ற சம்பவங்களை இவர்கள் எழுதியிருக்கின்றனர்.

இவரது சகோதரி உரூபா கூறுகின்றார்: இவருக்கு, தனக்கு கேன்ஸர் இருப்பது பற்றி தெரிய வந்த போது நான் எல்லா விஷயங்களையும் சகித்துக் கொள்வேன். ஆனால், எனது தாயார் அழுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. எனவே, மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இதைப் பற்றி அவரிடம் எடுத்துக் கூற வேண்டும் என்று என்னிடம் கூறினார். இவருக்கு எலும்பு மஜ்ஜை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது சகோதரியின் எலும்பு மஜ்ஜை அவருக்கு பொருத்தப்பட்டது. அது அவருக்கு பொருந்தி விட்டது. இதனால் அல்லாஹ் அவருக்கு குணமளித்தான். ஆனால் எந்நிலையிலும் இறுதியில் இறை நியதி இவ்வாறே இருந்திருக்கின்றது. Chemeotherophy நடந்து கொண்டிருந்த சமயத்தில் மருத்துவர்களுக்கு இவர் தப்லீக் செய்து வந்தார். அல்லாஹ்வின் மீது அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. அல்லாஹ் என்னை வீணாக்க மாட்டான் என்றே எப்போதும் கூறி வந்தார். அல்லாஹ் அவரை இங்கிருந்து கொண்டு சென்று விட்டாலும் மறுவுலகில் அவரது ஆசைகள் நிறைவேறிக் கொண்டிருக்கும் – இன்ஷா அல்லாஹ்.

டாக்டர் ஹஃபீஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அவருக்கு கேன்ஸர் இருப்பதை Diagonise செய்த பிறகு மஸ்ஹரை சந்திப்பதற்காக நான் கிளாஸ்கோ சென்றேன். அப்போது இறைவன் மீது மிகவும் நம்பிக்கை வைத்திருந்த ஒரு மனிதராக அவரை நான் கண்டேன். இவரது தாயார் கூறுகின்றார்கள்: அங்கும் கூட இவர் இறைவனது அருள்களை எப்போதும் நினைவு கூர்ந்து கொண்டிருங்கள் என்றே கூறி வந்தார்.

கிளாஸ்கோவைச் சார்ந்த மதிப்பிற்குரிய பேனஸீர் அப்துர் ராஃபிஃ சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு ஸ்ரீலங்காவுடன் தொடர்பு இருக்கின்றது. மஸ்ஹரின் தாயாரும் அவரது சகோதரிகளும் எனது ஆத்ம நண்பர்கள் ஆவர். மஸ்ஹருக்கு கேன்ஸர் இருப்பது தெரிய வந்தபோது இந்த குடும்பத்துடன் எனக்கு மேலும் அறிமுகம் ஏற்பட்டது. அவரை உடல்நலம் விசாரிக்க நாங்கள் மருத்துவமனைக்குச் சென்ற போது மிகவும் ஆறுதலாகவும் சகிப்புத்தன்மையுடனும் அவர் தனது நோய் பற்றி என்னிடம் கூறினார். அந்த நோயிலிருந்து அவர் குணமடைந்ததும் சிறிது காலம் வரை அவர் நன்றாக இருந்த சமயத்தில் கிளாஸ்கோவில் 5 கிலோ மீட்டர் வரை செல்லும் ஒரு Charity walk நடைபெற்றது. அதிலும் அவர் கலந்து கொண்டார். மிக எளிதாக என்னால் இதை செய்ய முடிந்தது என்று அவர் கூறினார். ஆனால், நீண்ட நோயை அவர் கடந்து வந்திருந்தார். Chemeotherophy போன்றவை அதன் Process சுயமே அவருக்கு கஷ்டத்தைத் தரக்கூடியதாக இருந்தது.

ஹாஃபிஸ் ஃபஸ்லே ரப்பீ சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை கற்றுக் கொள்வதில் அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்தது. மிகவும் இனிமையான உருக்கமான குரலில் அவர் திருக்குர்ஆனை ஓதி வந்தார். ஜாமிஆவில் சேர்வதற்க முன்னரும் கூட National Taleemul Quran Class –ல் தமது குடும்பத்தினருடன் கலந்து கொள்வதற்காக அவர் கிளாஸ்கோவிலிருந்து இலண்டன் சென்று வந்தார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவருக்கு Immigration தொடர்பான சில பிரச்சனைகள் இருந்தன. Case pass ஆகாமல் இருந்து வந்தது. ஜாமிஆவில் படித்துக் கொண்டிருந்த போது அவருக்கு கிளாஸ்கோவிலிருந்து இலண்டன் வர வேண்டியதிருந்தது. பிறகு ஒவ்வொரு முறையும் இரண்டு வாரங்கள் கழிந்த பிறகு மீண்டும் கிளாஸ்கோ செல்ல வேண்டியதிருந்தது. நான் அவரிடம் இதனால் உங்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டிருக்கும் என்று கூறினேன். அதற்கு அவர் ஒரு மகத்தான நோக்கத்திற்காக நாம் சிறு சிறு கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளும் போது அவை கஷ்டங்களாக இருப்பதில்லை என்று கூறினார்.

ஜாமிஆவில் ஆரியராக இருக்கின்ற வஸீம் ஃபஸ்ல் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மஸ்ஹர் ஹஸன் மிகவும் தைரியமுள்ள நிதானமாக நடந்து கொள்கின்ற, மரியாதையுடன் நடந்து கொள்கின்ற நிலையான இயல்பைக் கொண்ட மாணவராக இருந்தார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை மிகுந்த பொறுப்புணர்வுடனும், அன்புடனும், நன்றியுணர்வுடனும், உழைப்புடனும், தூய உள்ளத்துடனும் நிறைவேற்றுகின்ற சில மாணவர்களில் ஒருவராக அவர் இருந்தார். நிர்வாக விஷயங்களில் மிகவும் சிறந்த முறையில் செயல்படக்கூடியவராக இருந்தார். ஹாஸ்டல் நிர்வாகத்தில் பல வருடங்களாக செயலராகப் பணிபுரியும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒருவர் இந்தப் பணியை உங்களால் செய்ய முடியுமா? என்று கேட்டார். அப்போது ஓர் ஆசிரியர் இந்த மாணவரைப் பற்றி தனது கருத்தைத் தெரிவித்தவாறு பணியை ஒப்படைத்த பிறகு நாம் மஸ்ஹரிடமிருந்து நம்மை மறைத்துக் கொள்ள வேண்டியது வருகின்றது. ஏனென்றால், அவர் நம்மை விட அதிகமாக கவலையுடனும் நிதானமாகவும் நிரந்தர மனப்பாங்குடனும் அந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்து விடுவார் என்று கூறினார்.

இவரிடம் இருக்கின்ற நிர்வாகத் திறமைகள் மற்றும் தன்னலமற்ற தொண்டை இந்த விஷயத்தின் மூலமாகவும் நாம் கணித்து விடலாம். சில வருடங்களுக்கு முன் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் வருடாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடந்த போது இவருக்கு விருந்தோம்பல் துறையில் டியூட்டி கொடுக்கப்பட்டிருந்தது. விளையாட்டுகள் நடைபெறும் இறுதி நாளின்போது அதிகமான விருந்தினர்கள் வருவர். மதிய வேளை மதிய உணவிற்கான ஏற்பாடும் செய்யப்படுவதுண்டு. அப்போது இரவில் முழு நேரமும் விழித்திருந்து எல்லா விதமான ஏற்பாடுகளைச் செய்வதிலும் முழுமையாக பங்கு பெற்றார். ஒரு நொடிப்பொழுது கூட அவர் ஓய்வெடுக்கவில்லை. அடுத்த நாளும் அதே முகமலர்ச்சியுடன் தொண்டு செய்வதில் ஈடுபட்டு வந்தார். நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பிறகு இவர் தனது துறையின் நிகழ்வுகள் பற்றிய விரிவான எல்லா விபரங்களையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கையை ஆயத்தம் செய்தார். அது இப்போதும் நிர்வாகத்திடம் இருந்து வருகின்றது. இந்த அறிக்கையின் மூலமாக இந்த துறையுடன் தொடர்புடைய பணிகளுக்கு பேருதவி கிடைத்து வருகின்றது.

ஹாஃபிஸ் மஷ்ஹூது சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சில நாட்களுக்கு முன்பு இவருடன் தொலைபேசியில் பேசிய போது நான் விரைவாக உடல்நலம் பெற்று முபல்லிக் ஆக மார்க்கத்திற்கு தொண்டாற்ற விரும்புகின்றேன். இப்போது எனக்கு சிகிச்சை நடந்து கொண்டிருப்பதால் நான் எனது உள்ளூர் ஜமாஅத்திலேயே பணி செய்ய ஆரம்பித்து விட்டேன் என்று அவர் கூறினார். இவ்வாறே இன்னொரு சந்தர்ப்பத்தில் கிளாஸ்கோவில் நடைபெறுகின்ற 5 கிலோ மீட்டர் வரை நடந்து Charity Walk –ல் பங்கு பெற்றுள்ளேன் என்றும் என்னிடம் கூறினார். இதைப் பற்றி நான் ஏற்கனவே கூறி விட்டேன்.

அங்குள்ள ஜமாஅத்தின் முரப்பியாக இருந்த மஸ்ஹர் அக்ரம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மஸ்ஹர் அஹ்ஸன் சாஹிப் அவர்களின் குடும்பம் துபாயிலிருந்து கிளாஸ்கோவிற்கு வந்தபோது நான் ஸ்காட்லாந்தில் முரப்பியாக பணியாற்றி வந்தேன். இந்தக் குடும்பம் கிளாஸ்கோவிற்கு வந்த அதே நாளில் பள்ளிவாயிலில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் இந்த குடும்பத்தில் உள்ளவர்களும் பங்கு பெற்றனர். அப்போது மஸ்ஹர் அஹ்ஸன் சாஹிப் அவர்கள் ஸலாம் கூறி நிகழ்ச்சி நிறைவடைந்து துஆ செய்த பிறகு நேரடியாக சமையலறைக்குச் சென்று விட்டார். அங்குள்ள குழுவுடன் சேர்ந்து மிகவும் உழைத்தவாறு எல்லா பணிகளையும் செய்தார். அவர் வந்த முதல் நாளிலிருந்து அவர் ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்குச் சென்ற அந்த நாள் வரை எப்போதும் பள்ளிவாயிலுக்கும் ஜமாஅத்திற்கும் முழுமையாக தொண்டு செய்து வந்தார். மிகவும் குறைவாக பேசக் கூடியவராகவும், தூய்மையான இயல்பை உடையவராகவும், அகத்தூய்மையும், புறத்தூய்மையும் உடையவராகவும் அவர் இருந்தார். ஒருபோதும் அவர் அரட்டை அடிப்பவர்களுடன் சேர்ந்து அமர்ந்ததில்லை. ஒருபோதும் நேரத்தை வீணாக்கியதில்லை. அவருக்கு நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துகின்ற வழிமுறை தெரிந்திருந்தது. நான் ஜமாஅத்தின் முரப்பியாக இருந்ததன் காரணமாக அவர் எனக்கு மிகவும் அருகில் இருந்து வந்தார். இவரை நான் மிக அருகிலிருந்து பார்த்துள்ளேன். மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தின் எஜமானராக அவர் இருந்தார். மிகவும் மெல்லிய தொனியில் மெதுவாகப் பேசக் கூடியவராக இருந்தார். ஒவ்வொருவரையும் மதித்து மரியாதையுடன் அவர்களுடன் நடந்து கொள்கின்ற இளைஞராக அவர் இருந்தார். இவரது வக்ஃப் ஏற்றுக் கொள்ளப்பட்டு இவர் ஜாமிஆவில் சேர்ந்து மார்க்கக் கல்வியைப் பெற்று முபல்லிக் ஆகி மார்க்கத்திற்கு தொண்டாற்ற

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

வேண்டும் என்பது இவரது உள்ளத்திலுள்ள ஆசையாகவும் துடிப்பாகவும் இருந்தது. எந்த நாளில் அவருக்கு ஜாமிஆவில் அட்மிஷன் கிடைத்ததோ அன்று உலகிலுள்ள அருட்கொடைகள் எல்லாம் கிடைத்து விட்டது போன்று அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். கிலாஃபத்தின் மீது இவருக்கு ஆழமான அன்பு இருந்தது.

கிளாஸ்கோவின் காயித் ஆன அர்ஷத் மஹ்மூது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: (இவர் முதலில் சார்ஜாவில் இருந்து வந்தார்) நான் சார்ஜாவில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட போது மஸ்ஹர் அஹ்ஸனும் அங்கு இருந்தார். சார்ஜாவில் தங்கியிருந்தபோது ஜமாஅத் நிகழ்ச்சிகள் நடைபெறும்போதும் இஜ்திமா போன்ற சந்தர்ப்பங்களிலும் நடைபெறும் அறிவு சார்ந்த மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் இவர் ஆர்வத்துடன் கலந்து கொள்வார். நகரத்தை விட்டு வெகு தொலைவில் வைத்து நாங்கள் இஜ்திமாவை நடத்தியதால் வெகு நேரம் முன்னதாகவே அங்கு சென்று வகாரே அமலும் மற்ற ஆயத்தங்களையும் செய்ய வேண்டியதிருந்தது. மர்ஹூம் சிறிய வயதை உடையவராக இருந்தும் கூட இப்பணிகளைச் செய்வதில் அவருக்கு அதிகமாக தைரியம் இருந்து வந்தது.

காயித் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒருமுறை இஜ்திமாவில் உடனடிப் பேச்சுப் போட்டி நடைபெற்றது. இந்த போட்டி கடினமாக இருந்தது. தரப்பட்ட தலைப்பும் கடினமானதாக இருந்தது. அதற்காக அவர் தயாராகாமலும் இருந்தார். மஸ்ஹர் அவர்களும் இந்த போட்டியில் கலந்து கொண்டார். இவரது சொற்பொழிவைக் கேட்டு குத்தாம்கள் சிரிக்க ஆரம்பித்தனர். அப்போது கூட மஸ்ஹர் அஹ்ஸன், தான் எப்படி சொற்பொழிவாற்றியிருந்தாலும் அதைப் பற்றி பொருட்படுத்தாமல் அதனை முழுமையாக நிறைவு செய்தார். பிறகு எனக்கு ஏற்படுகின்ற தயக்கத்தால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. தயக்கம் காட்டுவதை இப்படித்தான் அகற்ற முடியும் என்று அவர் கூறினார். குத்தாம்களுக்காக நடைபெறும் போட்டிகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் நாம் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். மக்கள் சிரிக்கின்றனர் அல்லது சிரிக்காமல் இருக்கின்றனர் என்பதையெல்லாம் அவர் பொருட்படுத்தவே இல்லை. தயக்கத்தை அகற்றுவதற்குரிய ஒரே வழி எனக்கு தெரிந்ததை நான் பேசிக் கொண்டே இருப்பது தான் என்று அவர் கருதினார்.

கேம்பியாவைச் சார்ந்த நமது ஜமாஅத்தின் முரப்பி ஒருவர் இருக்கின்றார். கடந்த வருடம்தான் அவர் ஜமாஅத்திலிருந்து தேர்ச்சி பெற்றிருந்தார். அப்துர் ரஹ்மான் கான் என்ற அவர் கூறுகின்றார்: ஜாமிஆவில் நான் இவருடன் அதிகமாக நேரத்தை கழித்திருக்கின்றேன். ஜாமிஆவிலிருந்து வெளியேறிய பிறகு நாங்கள் வாட்ஸ்அப் மூலமாக தொடர்பில் இருந்து வந்தோம். நோய்வாய்ப்பட்ட பிறகு அவர் எனக்கு அனுப்பிய தூதுச் செய்தியை நான் கூறுகின்றேன். அது இதுவாகும்:

நான் இந்த நோயைக் கடந்து வந்து கொண்டிருக்கின்றேன். உண்மையில் அல்லாஹ் என் மீது பல அருள்களைப் பொழிந்துள்ளேன். இதன் அடிப்படையில் நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். எனவே, இந்த வேதனையைக் கடந்து செல்வதை நான் கடினமானதாகக் கருதவில்லை.

பிறகு தனது தூதுச் செய்தியை அவர் கூறுகின்றார்: நான் எனது நோயைப் பார்க்கவில்லை. எனக்கு முன்னால் தென்படுகின்ற எனது குறிக்கோளைப் பார்க்கின்றேன். அந்தக் குறிக்கோள் ஜமாஅத்திற்கு எந்த வகையில் நான் சிறந்த முறையில் தொண்டாற்ற முடியும் என்பதேயாகும்.

இவரது வகுப்புத் தோழராக இருந்த ஒருவர் முரப்பியாக ஆகியிருக்கின்றார். ஷேக் ஸமத் என்ற அவர் கூறுகின்றார்: அவர் எப்போதும் புன்சிரிப்புடன் காணப்படுவார். மக்களை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பார். மஸ்ஹர் அஹ்ஸன் எல்லாரிடமும் சமமாக நடந்து கொள்வார். ஒவ்வொருவரையும் தனது நண்பராகவே கருதி வந்தார். அவ்வாறே அவர்களுடன் நடந்து கொண்டார். எவருக்கும் அவரை விட்டு தூரத்தில் இருக்கின்ற அல்லது ஒரு வகையில் தன்னை அந்நியராகக் கருதும் அளவில் எந்த உணர்வும் எவருக்கும் ஏற்படாமல் அவர் பார்த்துக் கொள்வார். ஒருபோதும் எவருடனும் சண்டை போட்டதில்லை. இவரது உள்ளம் மிகவும் பரந்ததாகும். எல்லா சந்தர்ப்பத்திலும் தப்லீக் செய்து வந்தார். தப்லீகின் எந்த சந்தர்ப்பத்தையும் அவர் கை நழுவிப் போக விட்டதில்லை. மருத்துவமனையில் அவர் இருந்தபோது கூட அனைவருக்கும் தப்லீக் செய்கின்ற முஸ்லிம் என்ற இவர் புகழ்பெற்று விளங்கினார். இதன் காரணமாக அவர் எவருக்கும் எந்த வகையிலும் துன்பம் கொடுத்ததில்லை. யாரைப் பற்றிய தீய விஷயங்களைக் கூறியதில்லை. பிறருக்கு எந்த அளவு உதவ முடியுமோ அதை விட அதிகமாகவே அவர் உதவி செய்து வந்தார். ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயத்தையும் கருத்தில் கொள்வார். எல்லாருடனும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொண்டார்.

இவரது வகுப்புத் தோழரான சாஹில் மஹ்மூது சாஹிப் முரப்பி அவர்கள் கூறுகின்றார்கள்: இத்தகைய சிறந்த மனிதருடன் 7 வருடங்களைக் கழிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. எண்ணற்ற சிறப்புகளை உடையவராக அவர் இருந்தார். மற்றவர்களிடம் மிகவும் குறைவாகவே அவை இருந்தன. மிக உயர்வான விருந்தோம்பல் செய்பவராக அவர் இருந்தார். பணிவையும் தாழ்மைக் குணத்தையும் கடைபிடிப்பதில் உயர்ந்த முன்மாதிரியை வெளிப்படுத்துபவராகவும் நல்லெண்ணம் கொண்டவராகவும் நல்ல பணிகளைச் செய்வதில் எப்போதும் நல்ல எண்ணமுடையவராகவும் அவர் இருந்தார். ஜாமிஆவின் ஆரம்ப வருடங்களில் இவர் Prepair ஆக இருந்தார். சரியான நேரத்தில் தூங்கும்படி மாணவர்களுக்கு போதனை செய்து வந்தார். (குறித்த நேரத்தில் லைட்டை அணைத்து விட்டு அனைவரையும் தூங்கும்படி கூறுவது Prepair –ன் பணியாக இருந்தது.) தொழுகை நேரங்களில் மாணவர்களை எழுப்புவது, அறையின் தூய்மையின் பக்கம் கவனம் செலுத்தும்படி கூறுவது, எவராவது சண்டையிட்டால் அதை தடுத்து நிறுத்துவது ஆகியவை இவரது பணியாக இருந்தது. சண்டைகளைத் தடுத்து நிறுத்தும்போது மாணவர்கள் அவருக்கு தொல்லையும் கொடுத்தனர். அவர் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்று வந்தார். அவருக்கு தொந்தரவு செய்வதில் எங்களுக்கு இன்பம் இருந்தது என்று மாணவர்கள் கூறினர்).

அவர் தொடர்ந்து கூறுகின்றார்: ஒருமுறை நான் ஒரு தவறை செய்தேன். அப்போது அவர் என்னை அதட்டினார். சில நிமிடங்கள் கழிந்த பிறகு என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டு அழ ஆரம்பித்தார். மிகவும் மென்மையான உள்ளத்தை உடையவராக அவர் இருந்தார்.

இவர் கூறுகின்றார்: எப்போதாவது நான் நோய்வாய்ப்பட்டால் அல்லது விடுமுறை நாட்களில் உடல்நலம் இல்லாமல் நான் படுத்திருந்தால் நான் எழுவதற்கு முன்பே எனது கட்டிலுக்கு அருகில் காலை உணவைக் கொண்டு வந்து வைப்பார். எப்போதாவது எனக்கு ஜலதோஷம் ஏற்பட்டால் என்னிடம் கேட்காமலேயே சுடு தண்ணீரில் தேன் கலந்து கொண்டு வருவார். என்னுடன் (ஹுஸூர் அவர்களுடன்) அவருக்கு ஏற்பட்ட சந்திப்புகளைப் பற்றி மிகவும் ஆர்வத்துடன் கூறி வந்தார்.

சுருக்கமாகக் கூறுவதென்றால், உயிருள்ள இதயம் படைத்த கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட பணிவுள்ள நல்ல மனிதராகவும் மார்க்கத்தின் உண்மையான வீரராகவும் இறையச்சத்தைப் பேணுபவராகவும் உழைப்பவராகவும் அவர் இருந்தார். இந்த எல்லா சொற்களையும் மஸ்ஹருக்காக நாம் பயன்படுத்தலாம்.

இன்னொரு சிறப்பம்சம் அவரிடம் இருந்தது. அதாவது, எதை அவர் தனக்காக விரும்பினாரோ அதை தான் அவர் தனது நண்பர்களுக்காகவும் அவர் விரும்பினார். உண்பதற்காகவும் குடிப்பதற்காகவும் ஏதாவது பொருள்களை வாங்கி வரும்போது தனது நண்பர்களுக்காகவும் அவற்றை வாங்கி வருவார். எளிமையாக வாழ்வைக் கழித்து வந்தார். அவர் வீண் செலவுகளைச் செய்வதை ஒருபோதும் நான் கண்டதில்லை. இளமைப் பருவத்தில் இவ்வாறு சில இளைஞர்கள் வீண் செலவுகளைச் செய்கின்றனர். தூய்மையை மிக அதிகமாக கருத்தில் கொள்பவராக

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை வாசிக்க வேண்டும்

*ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லா –ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:*

*"இன்றைய காலகட்டத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவற்றிலிருந்தும் பலன் பெற வேண்டும். இந்த நூல்களும் கூட திருக்குர்ஆனின் ஒரு விளக்கவுரையாகவே இருக்கின்றன. அந்த நூல்களிலிருந்து இந்த விளக்கங்கள் நமக்கு கிடைக்கின்றன..... இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும்இந்த நூல்களைக் கண்டிப்பாக படிக்க வேண்டும். மக்களது ஆட்சேபனைகளுக்கு பதில் கூறுவதற்கான ஆதாரங்கள் இந்த நூல்களிலிருந்துதான் உங்களுக்கு கிடைக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சபைகளிலிருந்து அருள்களைப் பெறுவதற்கும் அவர்களின் நட்பிலிருந்து பயனைப் பெறுவதற்கும் இன்றைய நாட்களில் இதுவே வழிமுறையாக இருக்கின்றது. முதலில் கூட நான் கூறிக் கொண்டிருந்தேன். அவர்களின் நூல்களைப் படிப்பதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் நமக்கு எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கு கூட பதில் கிடைத்து விடும்."*

*(அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 2 ஜூலை 2004)*

*ஜமாஅத் சகோதரர்கள் ஜமாஅத்தின் Website ஆன www.alislam.org -லிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நூல்களின் ஆடியோவைக் கூட Download செய்து அவற்றை கேட்க முடியும்.*

*(தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது)*

அவர் இருந்தார். தொழுகைகளையும், தஹஜ்ஜுத் தொழுகையையும் முறையாக பேணி வந்தார். அவர் தனது அறையில் தொழுகை விரிப்பு ஒன்றை வைத்திருந்தார்.

இவர் கூறுகின்றார்: நான் பலமுறை இரவில் அவர் எழுந்து நஃபிலான தொழுகைகளை தொழுவதைப் பார்த்துள்ளேன். இடைவெளி விடாமல் ஒவ்வொரு வாரமும் நஃபிலான நோன்புகளையும் நோற்று வந்தார். சந்தா கொடுப்பதற்கான ஏற்பாட்டையும் சிறப்பாகச் செய்து வந்தார். ஒவ்வொரு விஷயத்திலும் அவரிடம் ஒரு ஒழுங்குமுறை இருந்து வந்தது. தனது நேரத்தை சரியான முறையில் பங்கிடுபவராக அவர் இருந்தார். ஜாமிஆவின் நாள்தோறும் கல்வி கற்பதைத் தவிர முறையாக தொடர்ந்து திருக்குர்ஆனை ஓதுவது, பிறகு ஜமாஅத் நூல்களை சிறிது வாசிப்பது, பிறகு எத்தகைய சீதோஷண நிலை இருந்தாலும் ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்வது, முறையாக செய்தித்தாள்களைப் படிப்பது, மதியம் சிறிது நேரம் ஓய்வெடுப்பது அது சில நொடிப்பொழுதுகளாக இருந்தாலும் சரியே ஆகிய இவையெல்லாம் அவரது அன்றாட வழக்கமாக இருந்து வந்தது. பிறகு தூங்குவதற்கு முன்னதாக முறையாக தொடர்ந்து டைரி எழுதுவது ஆகியவை இவரது சிறப்பம்சங்களாக இருந்தன. ஜுமுஆ பேருரையை முறையாக குறிப்பெடுத்து வந்தார். அத்துடன் அதிலுள்ள Points -ஐப் பற்றி தமது நண்பர்களுடன் Discuss செய்வார்.

இவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கும் உண்மையான முறையில் தன்னை அர்ப்பணிப்பவராக அவர் இருந்தார். ஒருபோதும் காலத்தின் கலீஃபா அல்லது ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக எந்தவொரு விஷயம் பேசப்படுவதையும் அவர் சகித்துக் கொள்ள மாட்டார். கிலாஃபத் தரப்பிலிருந்து கூறப்படுகின்ற ஒவ்வொரு திட்டத்திற்கும் லெப்பைக் என்று கூறி அதில் பங்கு பெறுவார். மற்றவர்களுக்கும் அதைப் பற்றி நினைவூட்டுவார். காலத்தின் கலீஃபாவின் சிப்பாய் என்று சுயமே தன்னைப் பற்றி அவர் கருதி வந்தார். நிச்சயமாக சிப்பாயாகவே அவர் இருந்தார். நான் கிலாஃபத்திற்காக எனது உயிரை தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றேன் என்று பலமுறை அவர் கூறி வந்தார். வெறுமனே இது அவரது சொற்களாக இருக்கவில்லை. மாறாக, அவரது உணர்வுகள் இதை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. அவர் கூறுவதை உண்மையில் செய்யக் கூடியவராக இருந்தார்.

அவருக்கு கேன்ஸர் இருப்பது தெரிய வந்த போது நீங்கள் இதுபற்றி கவலைப்பட வேண்டாம் என்று எங்களுக்கு அவர் தைரியமூட்டினார் என்று அவரது நண்பர்கள் கூறுகின்றனர். இறைவனுக்கு முன்னால் குனியுங்கள் என்று கூறினார். இறைவன் மீதுள்ள நம்பிக்கை மிகவும் வலுவானதாக இருந்தது. தனக்கு ஏற்பட்ட நோயை தனக்கு வந்த ஒரு சோதனையாகக் கருதி அதை ஏற்றுக் கொண்டார். அதைப் பற்றிய துக்கத்தை கவலையை ஒருபோதும் அவர் வெளிப்படுத்திக் காட்டவில்லை.

அவரது நண்பரான ஷர்ஜீல் என்றவொரு முரப்பி அவர்கள் எழுதுகின்றார்கள்: மிகவும் உயர்வான ஒழுக்கத்தை உடைய பிரியத்திற்குரிய நண்பராக அவர் இருந்தார். பல சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தார். எல்லாரையும் கருத்தில் கொள்பவராகவும் கிலாஃபத்தின் அந்தஸ்து பற்றிய உண்மையான அறிவைப் பெற்றவராகவும் அவர் இருந்தார். இறைவன் மீதுள்ள நம்பிக்கை மிகவும் வலுவாக இருந்தது. ஜமாஅத்திற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்பவராக அவர் இருந்தார். அர்ப்பணிக்கும் மனப்பாங்கை உடையவராக இருந்தார். ஒருபோதும் எவருக்கும் துன்பம் கொடுத்ததில்லை. இழப்பை ஏற்படுத்தியதில்லை. எல்லா சமயத்திலும் புன்சிரிப்புடன் காணப்படுவார். ஒருவர் அவருக்கு எவ்வளவுதான் தொந்தரவு கொடுத்தாலும் ஒருபோதும் அவர் கோபப்படமாட்டார். உணர்ச்சிவசப்பட்டதில்லை. வீணான விஷயங்களை ஒருபோதும் பேசியதில்லை. வீணான விஷயங்களிலிருந்து எப்போதும் அவர் விலகியே இருந்தார். இன்று வரை தீய வார்த்தைகளை அவர் பயன்படுத்தியதையோ தீயவற்றைப் பேசியதையோ நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு பணியையும் மிகுந்த பொறுமையுடனும் தைரியத்துடனும் பொறுப்புணர்வுடனும் உழைப்புடனும் ஆர்வத்துடனும் இவர் செய்து வந்தார். சோம்பலின் பெயரும் அடையாளமும் கூட இவரிடம் இருந்ததில்லை. ஜாமிஆவில் மீது மிகுதியான அன்பு இருந்தது. எண்ணத்தின் ஆற்றல் இவரிடம் மிகவும் வலுவாக இருந்தது. துன்பம் இருந்தும் கூட அவர் தைரியத்தை இழக்கவில்லை. மிகவும் தைரியத்துடன் தனது நோயை இவர் சகித்துக் கொண்டார்.

இவர்கள் கூறுகின்றார்கள்: ஒருபோதும் எவரையும் இவர் பரிகாசம் செய்ததில்லை. மாறாக, மக்கள் அவ்வாறு செய்வதிலிருந்தும் அவர்களை இவர் தடுத்து வந்தார். ஒரு முரப்பியிடம் இருக்க வேண்டிய அந்தப் பண்புகள் இவரிடம் இருந்தன. ஆரம்ப வகுப்பிலிருந்தே இவர் முழுமையான முரப்பியாகத் திகழ்ந்தார் என்று இவரது நண்பர்கள் இவரைப் பற்றி கூறுகின்றனர். தக்வாவின் நுட்பமான வழிகளைக் கடைபிடிப்பவராக இவர் இருந்தார். சிறு சிறு விஷயங்களையும் கருத்தில் கொள்பவராக இவர் இருந்தார். எனது Trimmer –லிருந்து வரும் சப்தம் அதிகமாக இருக்கும். எனவே மக்கள் தூங்கும் போது நான் Trim செய்வதில்லை என்று இவர் கூறி வந்தார்.

இவரிடம் எந்தவொரு செயற்கையான விஷயமும் இருந்ததில்லை. அவரது உள்ளத்தில் என்ன இருந்ததோ அதுதான் வெளியிலும் இருந்தது. சொல்லும் செயலும் ஒன்றாக இருந்தன. திருக்குர்ஆனின் கட்டளைகளைப் பேணுபவராக அவர் இருந்தார். அவர் எடுத்த குறிப்புகள் நன்றாகவே இருந்தன. தர்ஜுமத்துல் குர்ஆன் அதாவது திருக்குர்ஆன் மொழியாக்க வகுப்புகளின் குறிப்புகளையும் அவர் எழுதி வந்தார். அதனால் அவரது திருக்குர்அன் மொழியாக்கம் மிகவும் சிறப்பாக இருந்தது.

ஜாமிஆவின் மாணவரான ஆஃபாக் என்பவர் இப்போது முரப்பியாகி விட்டார். பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்து அவர் ஜாமிஆவில் சேர்ந்தார். சிறிது காலம் வரை அவர் பாகிஸ்தானிலுள்ள ஜாமிஆவில் படித்து வந்தார். அவரது பெற்றோர்கள் இங்கு வந்த பிறகு அவரும் இங்கேயே வந்து விட்டார்.

அவர் கூறுகின்றார்: மக்கள் என்னை சந்திக்க வந்தபோது மஸ்ஹரும் என்னை சந்திக்க வந்தார். இரண்டு நிமிடங்கள் கழிந்ததும் அவர் அங்கிருந்து சென்று விட்டார். திரும்பி வந்த போது அவரது கையில் படுக்கையும் தலையணை போன்றவையும் இருந்தன. நீங்கள் இவற்றை கொண்டு வரவில்லை. எனவே இந்த பொருள்களின் தேவை உங்களுக்கு இருக்கும் என்று நினைத்து நான் இவற்றை கொண்டு வந்தேன் என்று மஸ்ஹர் என்னிடம் கூறினார்.

இவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது வகுப்பு மூன்று மாதங்களுக்கு முன்பு எங்களது சகோதரரை உடல்நலம் விசாரிப்பதற்காக ஸ்காட்லாந்து சென்ற போது அவர் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். வீட்டில் அவரை சந்திப்பதற்காக நாங்கள் சென்று சமயத்தில் எங்களுக்கு முறைப்படி ஒரு நிறைவான விருந்திற்கான ஏற்பாட்டை அவர் செய்திருந்தார். மிகவும் வலியுறுத்திக் கொஞ்சமாவது ஏதாவது சாப்பிடுங்கள் என்று அவர் எங்களிடம் கூறினார்.

எந்நிலையிலும் மிகவும் நல்லவராகவும் வக்ஃபின் ஆன்மாவைப் புரிந்து கொண்ட மனிதராகவும் இவர் இருந்தார். இவர் மிகச் சிறிய வயதை உடையவராக இருந்ததால் அல்லாஹ் இவருக்கு சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. 26 வயதில் இவர் வஃபாத் ஆகி விட்டார். ஆனால் எங்கெல்லாம் தமது நண்பர்களுக்கு தர்பிய்யத் வழங்குவதற்கான சந்தர்ப்பம் இவருக்கு கிடைத்ததோ அங்கெல்லாம் அவர் தர்பிய்யத் வழங்கினார். தப்லீகிற்கான சந்தர்ப்பம் எங்கு அவருக்கு கிடைத்ததோ அங்கு அவர் தப்லீக் செய்தார். மாறாக, தனது இறுதி நேரத்தின் போது கூட ஒவ்வொரு டாக்டரும் நர்ஸும் படிக்கும் விதத்தில் ஒரு வாசகத்தை எழுதி அதனை தனக்கு முன்னால் அவர் வைத்திருந்தார். இவர் நோய்வாய்ப் –பட்டிருந்த சமயத்தில் மருத்துவமனையிலும் வீட்டிலும் நான் தொலைபேசியில் இவருடன் பேசினேன். அவர் மிகவும் தைரியத்துடன் எனக்கு பதில் கூறி வந்தார்.

இன்னும் சொல்வதென்றால், ஒருமுறை இவரது தாயார் கூறினார். சிகிச்சைககாக கொடுக்கப்பட்ட மருந்துகளின் காரணமாக இவரது வாயில்

## துஆக்கள் செய்வதற்கும் நஃபிலான காரியங்கள் செய்வதற்கும் நீங்கள் ரமலானுக்காக காத்திருப்பீர்களா?

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“இறை வணக்கங்கள் மற்றும் நன்மைகளைச் செய்வதன் பக்கம் ரமலானில் நமக்கு ஏற்படுகின்ற கவனத்தை நிரந்தரமாக பெறுவதற்கு நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அடுத்த ரமலானுக்காக ஆயத்தமாவதற்கும் அதனை வரவேற்பதற்கும் தொடர்ச்சியாக நமக்கு ஒத்திகையும் பயிற்சியும் இருந்து வரும். அதன் மூலம் அடுத்த ரமலானில் நாம் நுழையும்போது ஓர் இலக்கை நாம் கடந்த வந்திருப்போம். இங்கிருந்து பிறகு அடுத்த ரமலானிலிருந்து வெற்றிகரமாக வெளியேறுவதற்கான புதிய இலக்கை நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். அதன் மூலம் நன்மையில் முன்னேறிச் செல்பவர்களாக நாம் இருக்க வேண்டும். மேலும் இறைவனுக்கு அருகில் நாம் சென்று விட வேண்டும். அவனது இருப்பைப் பற்றி மேலும் அறிவைப் பெற்றுக் கொண்டவர்களாக நாம் ஆக வேண்டும். பிறகு நம்மில் பலரும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான பல இலக்குகளையும் கடந்து வந்து விட்டோம். ஆனால், நாம் எல்லா இலக்குகளையும் கடந்து வந்து விட்டோம் என்று நம்மால் கூற முடியாது. இந்த இலக்குகளைக் கடந்து செல்வதற்காக நாம் ரமலானுக்காக மட்டும் காத்திருப்பவர்களாக இருந்தால் பிறகு நமது வாழ்நாள் கடந்து சென்று விடும். ஆனால் நமது குறிக்கோளையும் நோக்கத்தையும் இலக்கையும் ஒருவேளை அடையாமல் நாம் இருந்து விடலாம். இன்னும் சொல்வதென்றால், ஒரு வருட காலம் செயல்படாமல் இருந்த காலக்கட்டம் நம்மை மீண்டும் நாம் முதல் நாளில் நின்ற இடத்திற்கே திரும்பக் கொண்டு சென்று விடும்.”

(ஜுமுஆ பேருரை 1 ஜுலை 2016)

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 3 NOVEMBER 2016 Issue No. 35

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

புண்கள் இருந்ததன் காரணமாக இவரால் பேச முடியாமல் இருந்தது. ஆனால், என்னுடன் பேசிய போது அவர் சரியாகவே பேசினார். நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். மிகவும் கலப்பற்ற தூய உள்ளத்துடன் வாய்ப்புண்கள் இப்போது எனக்கு துன்பத்தை தரவில்லை என்று என்னிடம் கூறினார். அல்லாஹ் அதற்கு பிறகு அருள் செய்தான். அந்த வாய்ப்புண்களும் அகன்று விட்டன. அவர் நலம் பெற்றார்.

மிகவும் நன்றியுணர்வுள்ளவராகவும் தனது வாழ்வின் நோக்கத்தைப் புரிந்த அஹ்மதி இளைஞராக அவர் இருந்தார். இந்த இளைஞர் மீது அல்லாஹ் எப்போதும் தனது கருணையை பொழிந்து கொண்டே இருப்பானாக! அவரது தகுதிகளை உயர்த்திக் கொண்டே இருப்பானாக! எப்போதும் நாம் அவரை இறைவனின் திருப்தியில் திருப்தியடைந்து இருப்பவராகவே கண்டோம். அல்லாஹ் இவருக்கு தனது நேசத்திற்குரியவர்களின் பாதங்களின் கீழ் இடமளிப்பானாக! இவரைப் போன்ற வாழ்வை அர்ப்பணிக்கின்ற ஆயிரக்கணக்கானவர்கள் உருவாக வேண்டும். அவர்கள் நுட்பமான முறையில் தங்களது குறிக்கோளைப் புரிபவர்களாக இருக்க வேண்டும். குறிப்பாக இவரது பெற்றோர்களுக்கும், சகோதரிகளுக்கும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் பொறுமையை மேற்கொள்வதிலும் தைரியத்திலும் இவர்களை முன்னேற வைப்பானாக!

இரண்டாவது குத்பாவிற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இவருக்காக ஜனாஸா ஹாஸிர் தொழுகையைத் தொழ வைப்பேன். நான் கீழே சென்று விடுவேன் சகோதரர்கள் இங்கேயே இருங்கள். ஸஃப்பை சரி செய்யுங்கள்.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

வசனங்களின் அடையாளம் இதுவாகும். அடிப்படையான உறுதியான வசனங்கள் இறைவனது வார்த்தைகளில் அதிகமாக உள்ளன. இறைவனது வார்த்தைகள் இவற்றால் நிரம்பியிருக்கின்றது. அவற்றின் பொருளும் தெளிவாக உள்ளன. அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் கட்டாயமாக குழப்பம் ஏற்படும். உதாரணமாக, இந்த இடத்தில் பாருங்கள். அதாவது எந்த நபர் இறைவன் மீது மட்டும் நம்பிக்கை கொண்டு அவனது தூதர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருக்கின்றனரோ அவர் இறைவனது பண்புகளை மறுப்பவராக ஆக வேண்டியது வருகின்றது. உதாரணமாக, நமது காலத்தில் பரஹ்ம்மு என்றவொரு புது பிரிவைச் சார்ந்தவர்கள் நாங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றோம். ஆனால், நபிமார்களை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று வாதம் செய்கின்றனர். அவர்கள் இறைனின் வசனங்களை மறுப்பவர்களாக இருக்கின்றனர். இறைவன் கேட்கின்றான் என்றால் அவன் பேசவும் செய்கின்றான் என்பது வெளிப்படையான விஷயமாகும். எனவே, அவன் பேசுகின்றான் என்பது நிரூபிக்கப்படவில்லை என்றால் அவன் கேட்கின்றான் என்பதும் நிரூபணமாகாது. இவ்வாறு அத்தகைய மக்கள் இறைவனது பண்புகளை மறுத்து நாத்திகர்களைப் போன்று ஆகி விடுகின்றனர். இறைவனின் பண்புகள் தொன்று தொட்டே இருந்து வருவது போன்றே நிரந்தரமாக இருக்கக்கூடியவையாகவும் இருக்கின்றன. அவற்றை வெளிப்படையாகக் காணும் வகையில் காட்டித் தரக்கூடியவர்களாக நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் மட்டுமே இருக்கின்றனர்.

இறைவனின் பண்புகளை மறுப்பதன் கட்டாய விளைவு இறைவனின் இருப்பை மறுப்பதாகவே ஆகி விடும். இந்த ஆராய்ச்சியிலிருந்து இறைவன் மீது நம்பிக்கை கொள்வதற்கு நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் மீது நம்பிக்கை கொள்வது எந்த அளவு அவசியமானது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அதாவது, தூதர்கள் இல்லாமல் இறைவன் மீது ஈமான் கொள்வது குறையுள்ளதாகவும் முழுமையடையாத நிலையிலுள்ள ஈமானாகவும் இருக்கின்றது. மேலும், அடிப்படையான உறுதியான வசனங்களின் அடையாளமாக இதுவும் கூட இருக்கின்றது. அதாவது, அவற்றிற்கான சாட்சியங்கள் அதிகமான வசனங்களில் மட்டும் காணப்படவில்லை. மாறாக, செயல் அளவிலும் அதற்கான சாட்சியங்கள் கிடைக்கின்றன. அதாவது, இறைவனது நபிமார்களின் தொடர்ச்சியான சாட்சியங்கள் அவை தொடர்பாக இருக்கின்றன. உதாரணமாக, எந்த நபர் இறைவனின் வார்த்தைகளான திருக்குர்ஆனையும் ஏனைய நபிமார்களுக்கு அருளப்பட்ட வேதங்களையும் பார்ப்பாரோ அவருக்கு நபிமார்களுக்கு அருளப்பட்ட வேதங்களில் எவ்வாறு இறைவன் மீது நம்பிக்கை கொள்வதைப் பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதோ அவ்வாறே அவனது தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்வதைப் பற்றியும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது என்பது தெரிய வரும். முதஷாபிஹாத் என்னும் உவமை வடிவிலான வசனங்களின் அடையாளம் என்னவென்றால் அடிப்படையான உறுதியான வசனங்களுக்கு எதிராக இருக்கின்ற பொருளை அந்த வசனங்களுக்கு தந்து அவற்றை நாம் ஏற்றுக் கொள்வதனால் கட்டாயமாக குழப்பம் ஏற்படும். மேலும் அவற்றின் பொருள் அதிகமாக இருக்கின்ற ஏனைய வசனங்களுக்கு எதிரானதாகவும் இருக்கும். இறைவனது வார்த்தைகளில் முரண்பாடு இருப்பது சாத்தியமற்றதாகும்.

எனவே, மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்ற அத்தகைய வசனங்களை எந்நிலையிலும் அதிகமாக இருக்கின்ற அந்த வசனங்களின் (கருத்திற்கு) கீழ் கொண்டு வர வேண்டியதிருக்கின்றது. அல்லாஹ் என்ற சொல்லைச் சிந்திப்பது இந்த சந்தேகத்தை அழித்து விடுகின்றது என்பதை நான் எழுதியிருந்தேன். ஏனென்றால், இறைவனது வார்த்தைகளில் அவன் சுயமே கூறியுள்ள விளக்கத்திற்கேற்ப அல்லாஹ் என்ற சொல்லிற்குரிய விளக்கம் இதுவாகும். அதாவது அல்லாஹ் எத்தகைய இறைவன் என்றால் அவன் வேதங்களை அருளியுள்ளான். அவன் நபிமார்களை அனுப்பினான். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதன் மூலம் கிடைக்கின்ற அந்த உயர்வான படித்தரங்களையும் உயர் தகுதிகளையும் மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பினான். ஏனென்றால், தூதுத்துவத்தின் ஒளியைப் பின்பற்றுவதன் காரணமாக அதைப் பின்பற்றிச் செல்பவர்கள் எந்த இலக்குகள் வரை சென்று சேர முடியுமோ அந்த இலக்குகள் வரை முழுக்க முழுக்க குருடர்களாக இருப்பவர்களால் சென்று சேர முடியாது. இது இறைவனின் அருளாகும். தான் விரும்பியவர்கள் மீது அவன் அருள் புரிகின்றான். இறைவன் அல்லாஹ் என்ற பெயரை தனது எல்லா பண்புகளையும் செயல்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதாக ஆக்கியுள்ளான். அவ்வாறிருக்கும்போது அல்லாஹ் என்ற பெயருக்கு பொருள் கூறும்போது இந்த முக்கியமான விஷயத்தை ஏன் கருத்தில் கொள்வதில்லை? திருக்குர்ஆன் அருளப்படுவதற்கு முன்னர் அரபு நாட்டிலுள்ள மக்கள் அல்லாஹ் என்ற சொல்லை எந்த பொருளில் பயன்படுத்தியிருந்தார்கள் என்பதுடன் நமக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், அல்லாஹ் திருக்குர்ஆனின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அல்லாஹ் என்ற சொல்லை இந்த பொருள்களிலேயே எடுத்துக் கூறியுள்ளான்.

அதாவது, அவன் தூதர்களையும், நபிமார்களையும், வேதங்களையும் அனுப்பக் கூடியவனாகவும் பூமியையும் வானத்தையும் படைத்தவனாகவும் இன்னின்ன பண்புகளை உடையவனாகவும், ஏகனாகவும், இணையற்றவ -னாகவும் இருக்கின்றான். இந்த விஷயத்தையே நாம் பேணி நடக்க வேண்டும். எனினும், எவர்களுக்கு இறைவனின் வார்த்தைகள் சென்று சேரவில்லையோ மேலும் அவர்கள் அதை பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருக்கும் நிலையில் அவர்களது அறிவு, புரியும் திறன் ஆகியவற்றிற்கேற்ப அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதன் மூலமாக மக்களுக்கு கிடைக்கின்ற அந்த படித்தரங்களையும் உயர் தகுதிகளையும் ஒருபோதும் அவர்களால் பெற முடியாது. ஏனென்றால், தூதுத்துவத்தின் ஒளியைப் பின்பற்றுவதன் காரணமாக அதைப் பின்பற்றிச் செல்பவர்கள் எந்த இலக்குகள் வரை சென்று சேர முடியுமோ அந்த இலக்குகள் வரை முழுக்க முழுக்க குருடர்களாக இருப்பவர்களால் சென்று சேர முடியாது. இது இறைவனின் அருளாகும். தான் விரும்பியவர்கள் மீது அவன் அருள் புரிகின்றான்.

(ஹகீத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 172-176)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad